ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස.(සා.පෙළ) විභාගය - 2017

க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2017

විෂයය අංකය / பாட இலக்கம்: **87**

විෂයය / பாடம்: **தொடர்பாடலும் ஊடகக் கல்வியும்**

## I පත්‍රය - පිළිතුරු
## I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය / வினா இல. | පිළිතුරු අංකය / விடை இல. | ප්‍රශ්න අංකය / வினா இல. | පිළිතුරු අංකය / விடை இல. | ප්‍රශ්න අංකය / வினா இல. | පිළිතුරු අංකය / விடை இல. | ප්‍රශ්න අංකය / வினா இல. | පිළිතුරු අංකය / விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 1 | 11 | 3 | 21 | 4 | 31 | 2 |
| 02 | 1 | 12 | 2 | 22 | 3 | 32 | 3 |
| 03 | 2 | 13 | 2 | 23 | 4 | 33 | 1 |
| 04 | 4 | 14 | 4 | 24 | 1 | 34 | 1 |
| 05 | 3 | 15 | 1 | 25 | 4 | 35 | 3 |
| 06 | 4 | 16 | 2 | 26 | 2 | 36 | 2 |
| 07 | 3 | 17 | 2 | 27 | 1 | 37 | 2 |
| 08 | 3 | 18 | 1 | 28 | 4 | 38 | 3 |
| 09 | 1 | 19 | 1 | 29 | 3 | 39 | 4 |
| 10 | 2 | 20 | 4 | 30 | 2 | 40 | 4 |

The National e-learning Portal for The General Education

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **01** බැගින් / புள்ளி வீதம்

මුළු ලකුණු/ மொத்தப் புள்ளிகள் $01 \times 40 = 40$

---

පහත නිදසුනෙහි දක්වෙන පරිදි බහුවරණ උත්තර පත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு வினாப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව / சரியான விடைகளின் தொகை: $\frac{25}{40}$

I පත්‍රයේ මුළු ලකුණු / பத்திரம் I இன் மொத்தப்புள்ளி: $\frac{25}{40}$

# 87T II

## வினா எண் : 01

1. புதிதாக நுழையும் ஊடகவியலாளர்களுக்குப் பலவிதமான தகவல்களைக் கொண்ட செய்திப் பத்திரிகையொன்று இணையத்தில் தோற்றம் பெற்றிருப்பதாக, ரவி தனது நண்பர்களில் ஒருவரான, வாணிக்குத் தகவலளித்தார்.

(i) பெரும்பான்மையான மக்களால் பயன்படுத்தப்படும் செவிப்புல மற்றும் செவிப்புல - கட்புல ஊடக வடிவங்கள் இரண்டினைப் பெயரிடுக.

செவிப்புல ஊடகம் – வானொலி

செவிப்புல கட்புல ஊடகம் – தொலைக்காட்சி

**(1 x 2 = 2 புள்ளிகள்)**

(ii) மேற்குறித்த இரண்டு ஊடக வகைகளின் பெறுநர்களைக் குறிப்பிடக்கூடியதான பதங்களை முறையே குறிப்பிடுக.

வானொலி – நேயர்கள்

தொலைக்காட்சி – பார்வையாளர்கள்;

**(2 x 1 = 2 புள்ளிகள்)**

(iii) இணையச் செய்திப் பத்திரிகைகள் போன்றில்லாமல், அச்சிடப்படும் செய்திப் பத்திரிகைகள் தமது அளவைப் பொறுத்து இரண்டு வகைகளாக வகைப்படுத்தப்பட முடியும். அந்த இரண்டு வகைகளும் யாவை ?

புரோட்சீட்

டப்லொய்ட்

**(2 x 1 = 2 புள்ளிகள்)**

(iv) வாணிக்குத் தனது எழுத்துமூலச் செய்தியை அனுப்புவதற்காக, இணைய வசதியைக் கொண்ட தனது செல்லிடப்பேசியை ரவி பயன்படுத்தினார். மேற்படி தேவைக்காக, அவர் பயன்படுத்தியிருக்கக் கூடிய இரண்டு தொடர்பாடல் வழிகளைப் பெயரிடுக.

- மின்னஞ்சல் (e-mail)
- குறுஞ்செய்தி (SMS)
- இணையம்வழியாக எழுத்துமூலச் செய்தியை அனுப்பக்கூடிய ஏனைய வடிவங்கள் (முகநூல், ருவிட்டர், வைபர், வாட்ஸ் அப் போன்றன)

**(2 x 1 = 2 புள்ளிகள்)**

(v) ரவி அனுப்பிய செய்தியை தான் பெற்றுவிட்டதான தகவலை, ஒரு தொலைபேசி அழைப்பு வழியாக வாணி அவருக்குத் தெரியப்படுத்தினார். தொடர்பாடல் செயன்முறையில் அவ்வாறான செயற்பாடு ஒன்றை நீங்கள் எவ்விதம் அழைப்பீர்கள் ?

பின்னூட்டம் (Feedback) **(2 புள்ளிகள்)**

(vi) மேற்படி தொலைபேசி அழைப்பில் ஏற்பட்டிருக்கக்கூடிய தொடர்பாடல் இடையூறுகள் இரண்டினை உதாரணங்களைப் பயன்படுத்தி எடுத்துரைக்க.

1. மொழிசார் இடையூறு
2. கருவிசார் இடையூறு

(கருவிசார் இடையூறுடன் தொடர்புடையதாக தொழில்நுட்ப இடையூறு, சூழல்சார் இடையூறு, உடல்சார் இடையூறு போன்றனவும் குறிப்பிடப்படலாம்)

(1/2 x 2 = 1 புள்ளி)

(முழுமையான புள்ளிகளுக்கு உதாரணங்கள் பயன்படுத்தப்பட வேண்டும்)

(1/2 x 2 = 1 புள்ளி)

( 2 புள்ளிகள்)

(vii) 'இடையூறு' என்ற எண்ணக்கருவினை உள்ளடக்கிய தொடர்பாடல் மாதிரியொன்றினை முதற்றடவையாக அறிமுகப்படுத்தியவர் யார் ?

ஷெனொன் மற்றும் வீவர்

(2 புள்ளிகள்)

(viii) ரவிக்கும் வாணிக்கும் இடையிலான இத்தகவல் பரிமாற்றம் தொடர்பாடல் வகைப்படுத்தலில் எந்த வகையைச் சேர்ந்ததாகும்?

ஆட்களிடைத் தொடர்பாடல்

(2 புள்ளிகள்)

(ix) மேற்படி தொடர்பாடல் நேருக்கு நேராக இடம்பெற்றிருக்குமானால், அதனை வலுப்படுத்தக்கூடிய வகையில் பயன்படுத்தக்கூடிய இரண்டு வாய்மொழி சாராத தொடர்பாடல் வழிகளைப் பெயரிடுக.

1. முகபாவனை
2. கண்தொடர்பு
3. சமிக்ஞை
4. அபிநயம்
5. உடல் தோற்றம்
6. உடல் அசைவுகள்
7. நிற்கும் நிலை
8. மௌனம்
9. ஆடையணிகள்
10. மணம்

11. மொழித்துணை அம்சங்கள்(Para – Language)

12. தொடுகை

13. குறியீடுகள் **(2x1 = 2 புள்ளிகள்)**

(x) ரவிக்கும் வாணிக்கும் இடையிலான செய்திகள் பரிமாற்றத்தில் பேச்சு மற்றும் எழுத்து ஆகிய இரண்டும் பயன்படுத்தப்பட்டுள்ளன. மொழியின் இந்த அம்சம் எவ்வாறு அழைக்கப்படும் ?

மொழியின் இரட்டைத்தன்மை

**(2 புள்ளிகள்)**

**(மொத்தம் = 20 புள்ளிகள்)**

## வினா எண் : 02

**2.** வெகுசன ஊடக நிறுவனமொன்றுக்குக் கடிதமொன்றை எழுதிய ரஞ்சித், அங்கு ஒரு சுயாதீன ஊடகவியலாளராகப் பணியாற்றும் சந்தர்ப்பத்தை வழங்குமாறு வேண்டுகோள் ஒன்றை விடுத்தார்.

(i) கடிதம் ஒன்றை எழுதுதல் தொடர்பாடலின் எந்த வடிவத்தைச் சார்ந்தது ?

எழுத்துமூலத் தொடர்பாடல்

**(1 புள்ளி)**

(ii) மேலே (i) இல் நீங்கள் குறிப்பிட்ட தொடர்பாடல் வடிவத்தைப் பயன்படுத்தும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய இரண்டு அம்சங்களைச் சுருக்கமாக எடுத்துரைக்க.

- இலக்கணம் இருத்தல்
- எழுத்துக் கூட்டொழுங்கு இருத்தல்
- தெளிவானதாக இருத்தல்
- எழுத்துக்களுக்கு உறுப்பு வடிவம் இருத்தல்
- வரிசைகளுக்கிடையே இடைவெளி சீராக இருத்தல்
- எழுதும்போது சொற்கள் சம இடைவெளிவிட்டு எழுதப்பட்டிருக்கும்
- ஒரு வாக்கியத்தை மற்றைய வாக்கியத்திலிருந்து பிரித்துக்காட்டும் போக்கு காணப்படும்
- ஓர் பந்தி மற்றைய பந்தியிலிருந்து வேறுபடுத்திக் காட்டப்படும்
- நிறுத்தற் குறியீடுகள் பொருத்தமாகக் காணப்படும்
- சரியான வார்த்தைப் பிரயோகம் காணப்படும்
- எழுத்தின் வகை, வடிவம், அளவு
- படைப்பாக்கப் பயன்பாடு

**(2 x1 = 2 புள்ளிகள்)**

(iii) வானொலி ஊடகத்தில் ஒரு சுயாதீன ஊடகவியலாளராக இணைவதே ரஞ்சித்தின் விருப்பமாக இருந்தது. வானொலி ஊடகத்தின் பிரதிகூலங்கள் **மூன்றை** விளக்குக.

1. வானொலி ஊடகம் ஒலியை மட்டும் அடிப்படையாகக் கொண்டமைந்தது
2. ஒருமுறை மாத்திரமே செவிமடுக்க முடியும்
3. செவிமடுப்போரின் கவனம் திசைதிரும்பக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகம்
4. ஆழமான, சிக்கலான கருத்துக்களை வானொலி மூலம் பெற முடியாது
5. தாமதமான பின்னூட்டம்
6. பெறுநரின் கற்பனையாக்கத்திலேயே அவரது புரிதல் தங்கியிருக்கும்
7. ஒலிபரப்பாளரின் / அறிவிப்பாளரின் முன்வைப்பு பொருத்தப்பாடாயிருத்தல் வேண்டும்
8. நேயர்களின் நிகழ்ச்சிகள் சார்ந்த விருப்பமே அவரவரது செவிமடுத்தலைத் தீர்மானிக்கும்
9. வரையறுத்த அளவிலேயே எண்சார் தகவல்களின் பயன்பாடு இருக்கும்

(விளக்கியிருந்தால் மாத்திரம் முழுப்புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்)

**(3 x1= 3 புள்ளிகள்)**

(iv) மேற்படி கடிதத்தை செய்திப் பத்திரிகை ஒன்றுக்கு ரஞ்சித் அனுப்புவாராக இருந்தால், அந்த ஊடக உள்ளடக்கத்தை முன்வைப்பதற்குப் பயன்படுத்தப்படக் கூடிய **நான்கு** வடிவங்களை விவரிக்குக.

செய்தி

ஆசிரியர் தலையங்கம்

சிறப்புக் கட்டுரைகள்

கேலிச் சித்திரம்

விடயக் கட்டுரைகள்

புகைப்படக் கட்டுரைகள்

அறிவிப்புக்கள்

(விவரித்திருந்தால் மாத்திரம் முழுப்புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்)

**(4x 1 = 4 புள்ளிகள்)**

**(மொத்தம் =10 புள்ளிகள்)**

## வினா எண் : 03

3. பஸ் ஒன்றில் பயணிக்கும்போது செய்திப் பத்திரிகை ஒன்றை வாசித்துக் கொண்டிருந்த சமீரா, அந்த பஸ்சில் ஒலித்துக் கொண்டிருந்த வானொலி அலைவரிசையொன்றில் ஒலிபரப்பாகிய செய்தியறிக்கையைச் செவிமடுப்பதற்காக, தனது வாசிப்பை நிறுத்திக்கொண்டார்.

(i) செய்தி வழியாக நிறைவேற்றிக்கொள்ளப்பட முடியுமான அடிப்படைத் தொடர்பாடல் செயற்பாடு ஒன்றை எழுதுக.

தகவலைப் பெற்றுக்கொள்ளுதல்

கல்வியினைப் பெறுதல்

பொழுதுபோக்கினைப் பெறுதல்

தூண்டுதலைப் பெறுதல்

(மேற்குறித்த நான்கினுள் ஏதாவது ஒன்றினைக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும்)

**(1 புள்ளி)**

(ii) சமீரா செவிமடுத்த அந்த நிகழ்ச்சி வடிவத்தின் இரண்டு முக்கிய இயல்புகளை எழுதுக.

1. பெரும்பாலும் நேரலை நிகழ்ச்சிகள்
2. செய்திக்கெனப் பிரதி ஒன்றிருத்தல்
3. ஒலிக்குறிப்புக்கள் அல்லது ஒலிச்சேர்க்கைகள் (Voice Cuts) இடையே பயன்படுத்தப்படலாம்
4. அலைவரிசைக்கேயுரிய அடையாளத்துடனான அல்லது குறிப்பிட்ட வடிவத்தில் செய்தி முன்வைக்கப்படல்
5. செய்தியறிக்கைகளுக்கென குறித்த கால அளவு காணப்படுதல்
6. குறிப்பிட்ட நேரங்களில் செய்தி ஒலிபரப்பு இடம்பெறல்
7. செய்திகளில் முன்வைப்புப் பட்டியலொன்றை இனங்காண முடியுமாயிருத்தல்

**(2 x 1 = 2 புள்ளிகள்)**

(iii) மேற்குறித்த நிகழ்ச்சி வடிவத்தில் மொழியைப் பயன்படுத்தும்போது, கவனம் செலுத்த வேண்டிய மூன்று அம்சங்களை விளக்குக.

01. எளிமையான மொழி
02. அங்கீகரிக்கப்பட்ட, தர நிர்ணயமாக அறியப்பட்ட மொழிப் பயன்பாடு
03. சுருக்கமான வாக்கியங்கள்
04. தரவுகள் மற்றும் எண்சார் தகவல்களின் குறைந்தளவிலான பயன்பாடு
05. கற்பனையாக்கத்துக்கு உதவக்கூடிய மொழிப் பயன்பாடு
06. கிரகித்து புரிந்துகொள்ளும் விதத்திலாகமொழி முன்வைக்கப்படல்
07. தெளிவு அல்லது சிக்கலான விடயங்களை முன்வைப்பதில் அதீத கவனம்
08. வட்டார மொழிப் பயன்பாடு தவிர்க்கப்படுதல்
09. அர்த்தங்களைத் தேடிக் கண்டறியும் வண்ணமாக மொழியைப் பயன்படுத்துதலைத் தவிர்த்தல்

(விளக்கியிருந்தால் மாத்திரம் முழுப்புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்)

**(3 x 1 = 3 புள்ளிகள்)**

(iv) சமீரா பயன்படுத்திய அத்தொடர்பாடல் வகையின் மூலம் சமூகத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்பை, நான்கு அம்சங்களைப் பயன்படுத்தி விவரிக்குக.

1. நேர காலத்துடனான தகவலளிப்பு (Timely Information)
2. தூண்டல்களை உருவாக்குதல் ( நன்மை / தீமை)
3. 'போலச்செய்தல்'களை ஊக்கப்படுத்துதல்
4. புதிய பொருட்கள் மற்றும் சேவைகளை அறிமுகப்படுத்துதல்
5. இரசனைகளை ஊக்கப்படுத்துதல்
6. உறவுகளை வளர்த்தெடுத்தல்
7. நடத்தை மாற்றங்களுக்கு வழிப்படுத்துதல்
8. நுகர்வுப் போக்குகளை மாற்றுதல்
9. தீர்மானங்களை மேற்கொள்ள உதவுதல்
10. மக்கள் அபிப்பிராயங்களை உருவாக்குதல் மற்றும் அபிப்பிராய மாற்றங்களுக்கு உதவுதல்

(விவரிக்கப்படிருந்தால் மாத்திரம் புள்ளிகள் வழங்குக.)

**(4 x 1 = 4 புள்ளிகள்)**

**(மொத்தப் புள்ளிகள் : 10 புள்ளிகள்)**

## வினா எண் : 4

4. மோட்டார் வாகன ஓட்டப்போட்டியொன்று பற்றிய ஊடகத் தகவல்திரட்டலை மேற்கொள்வதற்கு நீங்கள் பணிக்கப்பட்டிருப்பதாகக் கருதிக்கொள்க.

(i) மேற்படி நிகழ்வை அறிக்கையிடுவதற்காக, நீங்கள் ஒரு புகைப்படவியலாளராகப் பங்கேற்றிருந்தால் பயன்படுத்தக்கூடிய கமரா வகையினையும் வில்லையின் வகையினையும் பெயரிடுக.

கமெரா : டிஜிட்டல் தனி வில்லை எதிர்விம்பக் கமெரா

(Digital Single Lense Reflect Camera – SLR Camera)

அல்லது

டிஜிட்டல் கமெரா

**(1/2 புள்ளி)**

வில்லை :தொலை உரு வில்லை அல்லது குறுங்கோண வில்லை (tele-photo lense)

விரிகோண வில்லை (wide angle lense)

உருப்பெருக்கி வில்லை (zoom lense)

(ஏதாவது ஒன்றைக் குறிப்பிடலாம்)

**(1/2 புள்ளி)**

**(1 புள்ளி)**

(ii) இந்நிகழ்வு பற்றிய தகவலை தொலைக்காட்சி வழியாக அறிக்கைப்படுத்துவதற்காகப் பயன்படுத்தக்கூடிய **இரண்டு** வகையான நிகழ்ச்சி வடிவங்களைப் பெயரிடுக.

1. செய்திகள்
2. நேரலை நிகழ்ச்சி
3. அறிக்கை அல்லது விவரண நிகழ்ச்சி
4. நேர்காணல் / கலந்துரையாடல் நிகழ்ச்சி

**( 2 x 1 = 2 புள்ளிகள்)**

(iii) இந்நிகழ்வை வானொலி ஊடகம் வழியாக நேர்முக வர்ணனை செய்கையில், கவனத்திற் கொள்ள வேண்டிய மூன்று அம்சங்களை விவரிக்குக.

1. கற்பனையாக்கத்திற்கு உதவுதல்
2. படைப்பாக்க ரீதியான முன்வைப்பு
3. எளிமையான மொழிப் பிரயோகம்
4. துல்லியமான மற்றும் சரியான தகவல்கள்
5. நேர முகாமைத்துவம்
6. சந்தர்ப்பங்களுக்கேற்ற வகையிலான குரல் கட்டுப்பாடு
7. நிகழ்வதை குறித்த கால நேரத்துடனாக எடுத்துச் சொல்லுதல்
8. நிகழ்ச்சி குறித்த ஈர்ப்பைத் தக்கவைத்தல்

(விவரிக்கப்பட்டிருந்தால் மாத்திரம் முழுப்புள்ளிகள் வழங்குக.)

**(3 x 1 = 3 புள்ளிகள்)**

The National e-learning Portal for The General Education

(iv) நிகழ்வு பற்றிய நிகழ்ச்சியொன்றுக்காகத் தகவல்களைத் திரட்டுவதற்குப் பயன்படக்கூடிய **இரண்டு** வழிகளை உதாரணங்களுடன் விளக்குக.

1. அவதானிப்பு / பங்காற்றுகையுடனான அவதானிப்பு
2. நேர்காணல்கள் / கலந்துரையாடல்கள்
3. வினாக்கோவைகள்
4. இரண்டாம் நிலைத் தகவல்கள் அல்லது துணை நிலைத் தகவல்களைச் சேகரித்தல்

(உதாரணங்களுடன் விளக்கியிருந்தால் மாத்திரம் முழுப் புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்)

**( 2 x 2 = 4 புள்ளிகள்)**

**(மொத்தப் புள்ளிகள் : 10 புள்ளிகள்)**

## வினா எண் : 05

5. உங்களது பாடசாலை ஊடக அலகிடமிருந்து, செய்திப் பத்திரிகை ஒன்றை வெளியிடுவதற்கான பிரேரணையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. பாடசாலைச் சிறுவர்களுக்கு அவசியமான தகவல்களை அந்தச் செய்திப் பத்திரிகை உள்ளடக்குவது அவசியமென அனைவரினாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(i) வாசகர்களின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு, இச்செய்திப் பத்திரிகை என்ன வகையாக அமையும் ?

சிறுவர் பத்திரிகை

**(1 புள்ளி)**

(ii) இந்தப் பணிக்காக நியமிக்கப்படும் குழுவில் உள்ளடங்கும் **இரண்டு** பேரினைப் பெயரிட்டு, அவர்களின் பொறுப்புக்களை எடுத்துரைக்க.

1. பிரதம ஆசிரியர்
2. ஆசிரியர்கள்
3. செய்தியாளர்கள்
4. புகைப்படச் செய்தியாளர்கள்
5. வரைகலைஞர்கள் / கேலிச்சித்திரக்காரர்கள்
6. ஒப்பு நோக்குநர்கள்
7. விளம்பர சேகரிப்பாளர்கள்

(பொறுப்புக்கள் எடுத்துரைக்கப்பட்டிருந்தால் மாத்திரம் முழுப்புள்ளிகள் வழங்குக.)

**(2 x 1 = 2 புள்ளிகள்)**

(iii) ஒரு செய்திப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்காகத் தயாரிக்கப்படும் கட்டுரையொன்றின் படைப்பாக்கத்தை அதிகரிப்பதற்காகப் பயன்படுத்தக்கூடிய **மூன்று** மொழிசார் உத்திகளை விவரிக்குக.

1. உவமானங்களைப் பயன்படுத்துதல்
2. எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்துதல்
3. எதுகைமோனைகளைப் பயன்படுத்துதல்
4. வார்த்தை ஜாலங்களைப் பயன்படுத்துதல்
5. மேற்கோள்களைப் பயன்படுத்துதல்
6. உரையாடல்களைப் பயன்படுத்துதல்
7. நகைச்சுவையையும் எள்ளலையும் வஞ்சப்புகழ்ச்சியையும் பயன்படுத்துதல்
8. வேறுபட்ட எழுத்து நடைகளைப் பயன்படுத்துதல்

(விவரிக்கப்பட்டிருந்தால் மாத்திரம் முழுப்புள்ளிகள் வழங்குக.)

**(3 x 1 = 3 புள்ளிகள்)**

(iv) செய்திப் பத்திரிகை மற்றும் அதன் வாசகர்களிடையேயான உறவுநிலையை விருத்திசெய்வதற்கு, ஊடக விமர்சகரொருவர் மேற்கொள்ளக்கூடிய வகிபங்கினை, **நான்கு** உதாரணங்களைப் பயன்படுத்தி விளக்குக.

1. இருதரப்புக்களுக்குமிடையிலான உறவை வலுப்படுத்தலாம்.
2. ஊடகச் செய்திகளின் உண்மைத்தன்மையை எடுத்துரைக்க முடியும்.
3. ஊடகச் செய்திகளின் உள்ளார்ந்த அர்த்தங்களை எடுத்துரைக்க முடியும்.
4. வாசகர்களைத் தூண்டுவதற்காக எழுத்தாளர் பயன்படுத்தும் உத்திகளை அல்லது தந்திரோபாயங்களை வாசகர்களுக்கு எடுத்துரைக்க முடியும்.
5. ஊடகச் செய்திகள் கொண்டிருக்கக்கூடிய பின்புலங்களை அடையாளங்காண உதவமுடியும்.

(உதாரணங்களுடன் விளக்கியிருந்தால் மாத்திரம் முழுப் புள்ளிகள் வழங்கப்பட வேண்டும்)

**( 4 x 1 = 4 புள்ளிகள்)**

**(மொத்தப் புள்ளிகள் : 10 புள்ளிகள்)**

## வினா எண் : 06

6. பாதசாரிக் கடவையொன்றில் எவ்விதம் விபத்து ஒன்று இடம்பெற்றது என செய்திப் பத்திரிகை ஒன்றில் அறிக்கையிடப்பட்டதை ஒளிபரப்பிய தொலைக்காட்சி நிகழ்ச்சியை, ரமணன், தன் வீட்டிலிருந்தபடியே இணைய வழியாக, தனது செல்லிடத் தொலைபேசியூடாகப் பார்வையிட்டார்.

(i) இவ்விதமான பல ஊடகங்களின் இணைவு எவ்வாறு அழைக்கப்படுகின்றது ?

ஊடகக் குவிவு அல்லது இணைந்த ஊடகம் (Convergence)

**(1 புள்ளி)**

(ii) வேறுபட்ட ஊடக வடிவங்களின் மேற்படி ஒன்றிணைவை எதிர்நோக்குவதில் ஊடகவியலாளர்கள் கொண்டுள்ள இரண்டு சவால்களைப் பெயரிடுக.

1. தனிப்பட்ட ஊடகத்துடன் மாத்திரம் தொழிலாற்றும் ஊடகவியலாளர்கள் ஊடக குவிவுச் சூழலில் மற்றையவர்களிடமிருந்து தனிமைப்படுத்தப்பட்டவர்கள் ஆகின்றனர்.
2. அனைத்து ஊடகங்களிலும் தேர்ச்சிபெற்றவர்களாக அமைய வேண்டிய நிர்ப்பந்தம் எழுகின்றது.
3. அனைத்து ஊடகங்களுக்கும் செய்தி அறிக்கையிட வேண்டிய சிக்கலான, திறன்களை கொண்டிருக்க வேண்டியவர்களாகின்றனர்.
4. புதிய தொழில்நுட்பங்களுக்கேற்ப தம்மை இற்றைப்படுத்தும் நிலைக்கு அவர்கள் ஆளாகின்றனர்.
5. வேறுபட்ட ஊடகங்களுக்கான வேறுபட்ட ஒழுக்கநெறிக் கோவைகளை அவர்கள் அறிந்திருக்க வேண்டியுள்ளது.

6. ஒரே ஊடக நிறுவனம் வெவ்வேறு ஊடகங்களைக் கொண்டு இயங்குவதால் அந்தந்த ஊடகங்களுக்கான பெறுநர்களுக்கேற்ற வகையில், அவர்கள் திருப்தியடையும் வண்ணம் ஊடகச் செய்திகளை வழங்க வேண்டியுள்ளது.

**( 2x 1 = 2 புள்ளிகள்)**

(iii) இணையத்துடன் கூட்டிணைவாகவுள்ள புதிய ஊடகத்தின் இயல்புகள் **மூன்றினைச்** சுருக்கமாக அறிமுகப்படுத்துக.

1. எமது தேவைகளுக்கேற்ற வகையில் பயன்படுத்தும் தன்மை
2. புவியற் பரப்புகளைக் கடந்த பரவுகை
3. தகவல்களைக் கண்டறிந்து, அவற்றை தரவிறக்கம் செய்யும் இயலுமை
4. பல்நோக்கு (Multi Purpose) ஊடகம்
5. நேரடியாக (Online) பயன்படுத்தும் தகைமை (பரீட்சைகள், விளையாட்டு, வர்த்தகம்)
6. பெறுநராக – தகவல்களைப் பெறும் தன்மையுடம் கூடவே தகவல்களை உள்ளீடு செய்யும், பகிர்ந்துகொள்ளும், அபிப்பிராயங்களை முன்வைக்கும் இயலுமை
7. கலந்துரையாடல் ஊடகமாக இருப்பதால் தகவல்களை அவ்வப்போது செம்மைப்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு.
8. தனிபட்டவகையில் (தனியாள்) பயன்படுத்தக்கூடியது.
9. 'பயன்பாட்டுத் தோழமை' (User Friendly) கொண்டது.

( இயல்புகளைக் குறிப்பிட்டு விளக்கியிருந்தால் முழுப்புள்ளிகள் வழங்குக)

**( 3 x 1 = 3 புள்ளிகள்)**

(iv) பாதசாரிக் கடவை விபத்துகளைக் குறைப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய கட்புலத் தொடர்பாடல் வகைகள் நான்கினை விவரிக்குக.

1. சமிக்ஞைகள் (விளக்கு மற்றும் வழமையாகப் பயன்படுத்தப்படும் ஏனைய வீதி சமிக்ஞைகள்)
2. பாதசாரிக் கடவைகளுக்கு வர்ணந்தீட்டுதல்
3. அறிவிப்புப் பலகைகள்
4. பாதசாரிகள் கடவையைப் பயன்படுத்துவதற்கான காலத்தைக் காட்டும் சமிக்ஞைகள்
5. புகைப்படங்களையும் வரைபடங்களையும் எச்சரிக்கைகளாகப் பயன்படுத்துதல்
6. சுவரொட்டிகளைப் பயன்படுத்துதுதல்
7. டிஜிட்டல் பனர்களைப் பயன்படுத்துதல்
8. சுவர் அறிவித்தல்களைப் பயன்படுத்துதல்
9. பொலிஸ் சமிக்ஞைகள்

(முழுமையாக நான்கு வகைகளையும் பெயரிட்டிருந்தால் அதற்காக 01 புள்ளி மாத்திரம் வழங்குக.)

( வகைகளைக் குறிப்பிட்டு விவரித்திருந்தால் மாத்திரம் முழுப்புள்ளிகள் வழங்குக.)

( 4 x 1 = 4 புள்ளிகள்)

(மொத்தப் புள்ளிகள் : 10 புள்ளிகள்)

**<u>வினா எண்: 07</u>**

7. S → M → C → R

(i) இருவழித் தொடர்பாடலை மேற்கொள்வதற்கான, ஆனால் மேற்படி வரைபடத்தில் இடம்பெற்றிராத அம்சம் எது ?

பின்னூட்டம்

**(1 புள்ளி)**

(ii) C யினை இலங்கையின் ஒரு தேசியப் பத்திரிகை எனக் கருதினால், அதற்குப் பிரயோகிக்கக்கூடிய இரண்டு ஒழுக்கநெறிக் கோவைகளைப் பெயரிடுக.

1. இலங்கைப் பத்திரிகையாசிரியர் சங்கத்தின் ஒழுக்கநெறிக் கோவை
2. இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் ஒழுக்கநெறிக் கோவை
3. சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனத்தின் ஒழுக்கநெறிக் கோவை

**(2 x 1 = 2 புள்ளிகள்)**

(iii) M ஆனது, உள்ளூர் வர்த்தகத் தொலைக்காட்சி அலைவரிசையொன்றில் ஒளிபரப்பப்படும் விளம்பரச் செய்திகளைப் பிரதிநிதித்துவம் செய்வதாகக் கொள்க. அவ்வாறான தொலைக்காட்சி விளம்பரச் செய்திகளின் பிரதிகூலமான பாதிப்புக்கள் மூன்றினை விவரிக்குக.

1. அநாவசியமான, யதார்த்தத்திற்குப் புறம்பான தேவைகள் உருவாக்கப்படுதல்.
2. தர்க்கரீதியற்ற முறையிலான நுகர்வு
3. சமூகத்திற்கு அநாவசியமான தகவல்களை விளம்பரங்கள் வழங்குதல்
4. ஒழுக்க வரையறைகள் மீறப்படுதல்
5. அநாவசியமான போட்டித்தன்மைகளுக்கு இட்டுச்செல்லுதல்
6. அநாவசியமான போட்டித்தன்மைகளால் மக்களைத் திசைதிருப்பும், இயல்பை மிகையாக்கும் செய்திகள் முன்வைக்கப்படுதல்
7. நுகர்வோர் ஏமாற்றப்படும் வகையில் முன்வைக்கப்படும் செய்திகள்
8. விளம்பரங்களில் இடம்பெறும் செய்திகள் சில சமயங்களில் சட்டமுறையற்ற செயல்களையும் தூண்டுவதாக அமைதல்
9. தரமற்ற பொருட்களுக்கான சந்தை வாய்ப்பு
10. பண்பாட்டிற்கு எதிரான நடத்தைகளைத் தூண்டுதல்

(விவரித்திருந்தால் மாத்திரம் முழுப் புள்ளிகள் வழங்குக.)

**(3 x 1 = 3 புள்ளிகள்)**

(iv) R, விமர்சனமுள்ள பெறுநராயின், அவ்வாறான விமர்சகரொருவரின் நான்கு திறன்களை விவரிக்குக.

1. வெகுஜன ஊடகத்தின் வழியாக முன்வைக்கின்ற விடயங்களை சரியாக விளங்கிக்கொள்ளும் திறன்
2. ஊடகத்தினூடாக மறைக்கப்படுபவை எவையென்பதை விளங்கிக்கொள்ளும் திறன்
3. வெகுஜன ஊடகங்கள் எந்தக் குறிக்கோள்களுடன் செயற்படுகின்றன என்பதனைப் புரிந்துகொள்ளும் திறன்
4. வெகுஜன ஊடகங்களினால் மேற்கொள்ளப்படும் முயற்சிகள் தன்னை எத்தகைய நபராக ஆக்குகிறது என்பதை விளங்கிக்கொள்ளும் ஆற்றல்
5. பெறு நரைத் தூண்டுவதற்காக ஊடகங்களினால் மேற்கொள்ளப்படும் தந்திரோபாயங்களை விளங்கிக்கொள்ளும் திறன்
6. ஊடகங்கள் எவ்வாறான தகவல்களை வழங்கியபோதும் தமக்குத் தேவையானவற்றை மாத்திரம் வடிகட்டிப் பெற்றுக்கொள்ளும் திறன்
7. ஊடகச் செயற்பாடுகள் தொடர்பான தமது வெளிப்பாட்டினை தனிப்பட்ட ரீதியிலும் ஒழுங்கமைப்பு ரீதியாகவும் ஊடகங்களுக்கு முன்வைத்தல் ஊடாக ஊடகங்களுடன் இடைத்தொடர்பினைப் பேணுவதற்குரிய ஆற்றல்கள்

(விவரிக்கப்பட்டிருந்தால் மாத்திரம் முழுப் புள்ளிகள் வழங்குக.)

**(4 x 1 = 4 புள்ளிகள்)**

**(மொத்தப் புள்ளிகள் : 10 புள்ளிகள்)**